


# 4 ஸ்ரீ விஹாருக்குச் செல்வோம்



## செயற்பாடு 1

**விலைப்பட்டியலைப் பார்ப்போம்; பேசுவோம்; வாசிப்போம்.**

| | |
|---|---|
| உழுந்து வடை | 20 ரூபாய் |
| பருப்பு வடை | 15 ரூபாய் |
| கீரை வடை | 25 ரூபாய் |

| | |
|---|---|
| தோசை | 30 ரூபாய் |
| நெய்த் தோசை | 80 ரூபாய் |
| மசாலாத் தோசை | 75 ரூபாய் |
| வெங்காயத் தோசை | 70 ரூபாய் |

| | |
|---|---|
| இட்டலி | 25 ரூபாய் |
| பராட்டா | 20 ரூபாய் |
| உப்புமா | 50 ரூபாய் |
| பொங்கல் | 45 ரூபாய் |
| பிட்டு | 30 ரூபாய் |

| | |
|---|---|
| மோர் | 35 ரூபாய் |
| பாயாசம் | 60 ரூபாய் |
| ஐஸ் கிரீம் | 80 ரூபாய் |
| பலூடா | 80 ரூபாய் |

**சோடிகளாக இணைவோம்; வினா எழுப்புவோம்; விடையளிப்போம்.**

1. உங்களுக்கு என்ன சாப்பாடு வேணும்? ______________________
2. உங்களுக்குக் குடிக்க என்ன வேணும்? ______________________
3. மசாலாத் தோசையின் விலை என்ன? ______________________
4. மோர் என்ன விலை? ______________________

# செயற்பாடு 2

**படத்தைப் பார்ப்போம்; உரையாடுவோம்.**




**பின்வரும் வினாக்களை வினவிக் கலந்துரையாடுவோம்.**

1. இது எந்த இடம்? ____________________

2. இங்கு எத்தனை பேர் உள்ளனர்? ____________________

3. இங்கு யார் யார் இருக்கிறார்கள்? ____________________



## செயற்பாடு 3

13

**ஆசிரியர் உதவியுடன் உரையாடலைக் கேட்போம்; வாசிப்போம்.**

வெயிட்டர் : வாங்க, இருங்க. என்ன சாப்பிடவேணும்?

அப்பா : என்ன சாப்பிடுவோம்?

சிவா : சாப்பிட வேண்டாம். ஏதாவது குடிப்போம்.

அம்மா : எனக்குச் சரியான தாகம், எனக்கு மோர் வேணும்.

சங்கீத் : எனக்கும் மோர்.

அப்பா : எனக்குச் சரியான பசி, எனக்கு வெங்காயத் தோசை தான் வேணும்.

அசங்க : எனக்கு ஐஸ்கிரீம்.

சிவா : எனக்குப் பாயாசம்.

அசங்க : பாயாசமா?

சிவா : ஓ ... பாயாசம் நல்ல ருசி. குடித்துப் பாருங்கள்.

அசங்க : அப்ப எனக்கும் பாயாசம் தாங்க.

அப்பா : கொஞ்சம் வாங்க, எங்களுக்கு இரண்டு வெங்காயத் தோசை, இரண்டு பாயாசம், இரண்டு மோர் கொண்டு வாங்க.

வெயிட்டர்: சரி சேர், கொஞ்ச நேரம் இருங்க.

அப்பா : சரி சரி.



சிவா : பாயாசம் எப்படி?

அசங்க : ம்ம்... பாயாசம் நல்ல ருசி.

அம்மா : சனிக்கிழமை வீட்டுக்கு வாங்க. நாங்கள் பாயாசம் செய்வோம்.

சங்கீத் : அசங்க, அப்ப வாங்க.

அசங்க : சரி சரி.

அப்பா : பில் கொண்டு வாங்க.

வெயிட்டர்: இந்தாங்க பில்.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| **ஏதாவது** | - | මොනවා හරි |
| **தாகம்** | - | පිපාසය |
| **ருசி** | - | රසයි |
| **கொஞ்சம்** | - | ටිකක් |
| **பாயாசம்** | - | සව් ආදියෙන් සාදන ලද බීමක් |
| **செய்வோம்** | - | සාදමු |



## செயற்பாடு 4

குழுக்களாக இணைவோம். நடித்துக் காட்டுவோம்.

## செயற்பாடு 5

**சரியாயின் சரி (✓) எனவும், பிழையாயின் பிழை (×) எனவும் அடையாளம் இடுவோம்.**

1. அசங்கவுக்குச் சரியான பசி. ☐
2. அம்மாவுக்குச் சரியான தாகம். ☐
3. அப்பாவுக்கு மசாலாத் தோசை வேணும். ☐
4. அம்மாவுக்குப் பாயாசம் செய்யத் தெரியும். ☐

## செயற்பாடு 6

உங்களுக்கு என்ன சாப்பிட விருப்பம்?
உங்களுக்கு என்ன சாப்பிட விருப்பம் இல்லை?

எனக்கு — தோசை / வடை / இட்லி — சாப்பிட விருப்பம்/விருப்பம் இல்லை.




எனக்கு — மோர் / ஐஸ்கிரீம் / பாயாசம் — குடிக்க விருப்பம்/ விருப்பம் இல்லை.




## செயற்பாடு 7

**எங்களுக்குத் தெரிந்த உணவு வகைகளை அட்டவணைப் படுத்துவோம்.**

| உறைப்பு | இனிப்பு |
|---|---|
| ______________________ | ______________________ |
| ______________________ | ______________________ |
| ______________________ | ______________________ |
| ______________________ | ______________________ |
| ______________________ | ______________________ |

## செயற்பாடு 8

**ஆசிரியர் உதவியுடன் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

அசங்க : அம்மா எங்கே?

சிவா : பாயாசம் செய்யப் போகின்றார்.



அசங்க : அம்மா பாயாசம் செய்யச் சொல்லித் தாங்க.

அம்மா : சரி சரி. வாங்க சொல்லித் தருகிறேன்.


**தேவையான பொருட்கள்**

$\frac{1}{2}$ கப் சவ்வரிசி, $\frac{1}{4}$ கப் சேமியா, $\frac{3}{4}$ கப் சர்க்கரை, $\frac{1}{4}$ கப் நெய், $\frac{1}{2}$ கப் பால், முந்திரிப்பருப்பு (தேவையான அளவு), உலர்ந்த திராட்சை (தேவையான அளவு)



## செயற்பாடு 9

**பாயாசம் செய்யத் தேவையான பொருட்களை அறிந்து கொள்வோம்; இணைப்போம்.**


| | |
|---|---|
|  | சர்க்கரை |
|  | பால் |
|  | முந்திரிப்பருப்பு |
|  | திராட்சை |
|  | சவ்வரிசி |
|  | சேமியா |
|  | நெய் |


## செயற்பாடு 10

**துலங்குவோம்; கட்டளைகளுக்கு ஏற்பப் பாயாசம் செய்வோம்.**

1. சவ்வரிசியைக் கழுவுங்கள்.
2. $1\frac{1}{4}$ கப் தண்ணீர் எடுங்கள்.
3. தண்ணீரைக் கொதிக்க வையுங்கள்.
4. சவ்வரிசியை அதில் போடுங்கள்.
5. சேமியாவை நெய்யில் வறுத்துக் கொள்ளுங்கள்.
6. சவ்வரிசியுடன் சேருங்கள்.
7. சவ்வரிசி நன்றாக வெந்தபின்; பாலையும், சர்க்கரையையும் சேர்த்துக் கொதிக்க வையுங்கள்.
8. நெய்யில் முந்திரிப்பருப்பையும் உலர்ந்த திராட்சையையும் வறுத்துக் கொள்ளுங்கள்.
9. பாயாசத்தில் சேருங்கள்.


**குழு நிலையில் கலந்துரையாடுவோம்; பாயாசம் செய்வதை ஒழுங்குபடுத்தி இலக்கம் இடுவோம்.**




















## செயற்பாடு 11

குழுவாக இணைவோம்; பாற்சோறு எவ்வாறு செய்வது என்பது பற்றிக் கலந்துரையாடுவோம்; வகுப்பில் முன்வைப்போம்.

### சொல் அறிமுகம்

**கழுவுங்கள்** - සෝදන්න

**எடுங்கள்** - ගන්න

**போடுங்கள்** - දාන්න

**வறுத்துக் கொள்ளுங்கள்** - බැදගන්න

**சேருங்கள்** - එකතු කරන්න

**கொதிக்க வையுங்கள்** - රත්වෙන්න තබන්න



# செவிமடுப்போம் உச்சரிப்போம்



த

ත | ද

14

| த - ත | த - ද |
|---|---|
| தாருங்கள் | அந்த |
| தாகம் | இந்த |
| தெரியும் | தந்தை |
| திராட்சை | உழுந்து |
| தோசை | முந்திரிப்பருப்பு |
| எத்தனை | |



## දැන් මට පුළුවන්

| | ✓ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. ආපන ශාලාවක දී, කෑම සහ බීම ඇණවුම් කිරීම | | | |
| 2. මා කැමති කෑමක් බීමක් ගැන යහළුවෙකු සමග කතා බහ කිරීම | | | |
| 3. කෑම වට්ටෝරුවක් කියවා තේරුම් ගැනීම | | | |
| 4. කෑම වට්ටෝරුවක් ලිවීම සහ එය විස්තර කිරීම | | | |
| 5. த අක්ෂරයේ ත, ද යන උච්චාරණ වෙනස්කම හඳුනා ගැනීම | | | |